ஊவ மாகாணம் உடுகிந்தைப்பகுதியில் தெகிவினிப்பளாத்தை கோறளையைச்சேர்ந்த எதண்டுபோல என்னுங் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் *உருதப்படுத்திய படப்பிரதியில் விவரித்தபடியே 1 ரூட்டு 30 பேர்ச்சு விசாலமுடையதும், சாமானியமாய் உகுறெஸ்சேபத்தன என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டு வருவதும் 879 ம் இலக்கப் பிரதமபடத்தில் 3057½ ம் துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி, இதற் கெல்லை : வடக்கு-முடிக்குரிய கனிகட்டுகெலபத்தன ; கிழக்கு-கெந்தகொல்லக் கிராம எல்லை ; தெற்கும், மேற்கும்-முடிக்குரிய கினிகட்டுகெலபத்தன.

* நூங்கிலீசில் IV. ம் பாகம் 1132 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

2,853

[Arukgammana, Kegalle District.]

1897 ம், 1899 ம், 1900 ம் ஆண்டுகளின் வெண்ணிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச்சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துச்சொல்பவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1907 ம் ஆண்டு செப்தம்பர் மீ 27 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கேகாலைக் கச்சேரியில் அரசாட்சி உதவி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு அல்லது எழுத்து மூலமாக சொல்லப்பட்ட காணி அல்லது காணிகளுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டென்ற சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துச்சொல்பவர் யாருமிருந்தால், அவர்கள் கேகாலை டிஸ்திறிக்கைச்சேர்ந்த கேகாலைக்கச்சேரி அரசாட்சியாரின் உதவி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லிய பாணலச் சட்டங்களின் பிரகாரம் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துச்சொல்லப்படாததாகிய குறித்த காணிகளை முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்து கொள்க.

---

எம். ஸ்டீவன்சன்,
அரசாட்சி உதவி ஏசென்று.

சொல்லப்பட்ட காணிகளின் விபரம்.

சப்பிரகமுவே மாகாணத்தைச்சேர்ந்த கேகாலை டிஸ்திறிக்கு வெலிகலகோறளை கந்துப்பிற்றபத்து அறுக்கம்மனை என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைத்திருக்கும் *உறுதிப்படுத்திய படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.

பிரதம படம் 244.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|---|---|---|---|
| K 36 | ... | எந்தகல்லமூலகேனே ... | ... | ... | ... | 0 2 36 |
| N 36 | ... | போகாகேனே | ... | ... | ... | 1 2 17 |
| | | | | | | 2 1 13 |

எல்லைகளாவன :—வடக்கு-தற்பாரும் ஏ. சியாத்துவாலும் மறுபெயராலும் உரித்துப்பேசும் ஆராச்சிலாயகேன, கே. களுகாமி உரித்துப்பேசும் நாக்கத்தனகேன, ஜீ. புஞ்சிறுலையால் உரித்துப்பேசும் அஸ்வெத்துமகாவகேன ; கிழக்கு-ஜீ. புஞ்சிறுலையும் மறுபேர்களினாலும் உரித்துப்பேசும் (பி. ப. 244/L 36) வடஅமுதன்னகும்புறகாவகேன ; தெற்கு-ஜீ, புஞ்சிறுலையும் மறுபேரும் (பி. ப. 244/M 36) உரித்துப்பேசும் கறந்தவத்தவலகேன ; மேற்கு-உ. ப. 121,298 எஸ். தீ. முத்தையாவால் உரித்துப்பேசும் போகாகேனே, கே. களுகாமியும் மறுபேரும் உரித்துப்பேசும் காணி.

II.

பிரதம படம் 244.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|---|---|---|---|
| L 36½ | ... | நாறங்காமூல்லசேன ... | ... | ... | ... | 1 1 10 |

எல்லைகளாவன :—வடக்கு-ஜீ. புஞ்சிறுலையால் உரித்துப்பேசும் அசெத்துமகாவகேன ; கிழக்கு-மெனிக்எத்தனவால் உரித்துப்பேசும் (பி. ப. 113/2288) பறகாமூல அசெத்துமவும், புஞ்சிறுலையினாலும் சியாத்துகாமியினாலும் உரித்துப்பேசும் (பி. ப. 113/2289) நாறங்காமூன்ளயில்லாவையும், நீரோடையும், ஜீ. மல்காமியினால் உரித்துப்பேசும் (பி. ப. 113 2335) அசெத்துமயில்லாவையும் ; தெற்கு-புஞ்சிறுலையினாலும் மெனிக்எத்தனாவினாலும் உரித்துப்பேசும் (பி. ப. 113/2290) வடஅமுதன்னகும்புறவும் ; மேற்கு-ஜீ. புஞ்சிறுலையும் மறுபேரும் உரித்துப்பேசும் (பி. ப. 244/L 36) வடஅமுதன்னகும்புறகாவகேனயும்.

*இங்கிலீசின் IV. ம் பாகம் 1133—1134 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க.

2,854

---

[Puwakgahatotupola, Hambantota District.]

இதின் கீழ் குறிக்கப்பட்டிருக்கின்ற காணிக்கு ஏதும் உரித்துச்சொல்லுகிறவர்கள் யாருமிருப்பாராகில், அவர்கள், 1907 ம் ஆண்டு செப்தம்பர் மீ 30 தேதி துவக்கம் மூன்று மாதத் தவணைக்குள் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்கின் உதவி ஏஜண்ட்துரை அவர்கள் முகதாவில் வெளிப்பட்டு சொல்லப்படும் காணிக்கல்லது அதிலோர் பாகத்துக்கு விருக்கும் உரித்தை காண்பிக்காவிட்டால், மேற்சொல்லிய உதவி ஏஜண்ட்துரை அவர்கள் தங்களுக்கு 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளில் இயற்றப்பட்ட வெண் காணி கட்டளைச்சட்டங்களால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் பிரகாரம் உரித்துச்சொல்லாமல் விட்ட சொல்லப்படும் காணியை அரசாட்சியாரின் காணியென்று அவர்களின் கையொப்பமுள்ள எழுத்தால் கூறப்படுமென்பதை இதனால் அறிந்துகொள்ளவேண்டும்.

---

எல். டபிள்யு. பீ. கிரேடர்,
அரசாட்சி உதவி ஏஜண்ட்.

சுட்டிய காணியின் விவரம்.

தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்கில் மாகம்பத்துவையில் புவக்கஹதொடுபல என்னும் ஊரில் இருக்கும் இதற்குச்சேர்ந்திருக்கும 62 ம பிரதம பிளானில் 8 ல் காண்கும் 12 பர்சஸ் விசாலமுள்ளதும், என்றகாணி :—

இது வடக்கே-வளவை ஆறு, இன்னம் ஆறுத்துக்குடைய பங்களாவத்த அல்லது சராப்புகேவத்தாலும்; கிழக்கு-ஆறுத்துக்குடைய பங்களாவத்த அல்லது சராப்புகே வத்தாலும்; தெற்கு-ஓர் பாதையாலும்; மேற்கு-வளவை ஆற்றுலும், இன்னும் லேல் மொதலியாருடைய காணியாலும் சுத்தப்பட்டிருக்கிறது.

* இங்கிலீசின் IV. ம் பாகம் 1134 ம பக்கத்தின் படத்தைப் பார்க்க.

2,855

---

[Tender for Sale of Opium License within the Local Board Limits of Batticaloa ]

1899 ம் ஆண்டின் 5 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவின் பிரகாரம் மட்டுக்களப்பு சுதேச சவுக்கிய சங்க எல்லைக்குள் 1908 ம் ஆண்டு தைமாதம் 1 ந் தேதி தொடக்கம் 1908 ம் ஆண்டு மார்கழிமாதம் 31 ந் தேதி வரைக்கும் அபின் சில்லறையாக விற்பதற்குக் கொடுக்கப்படுந் தத்துவம் ஒன்றாயாகும். அத்தத்துவம் மேற்சொல்லிய கட்டளைச் சட்டத்துக்கும் 1905 ம் ஆண்டு ஆவணிமாதம் 25 ந் தேதியில் அரசாட்சியாரின் "கசற்" பத்திரிகையிற் பிரசித்தம்பண்ணியிருக்கும் பொருத்தனைகளுக்கும் அமைதலாக 1907 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 8 ந் தேதியாகிய வெள்ளிக்கிழமை மதியம் மட்டுக்களப்புக் கச்சேரியில் பிரசித்த ஏலத்திற்கூறி விற்கப்படும்.

சொல்லப்பட்ட பொருத்தனைகளின் காப்பிகளை இக்கந்தோரிற் பெற்றுக்கொள்ளவேண்டியது.

மட்டுக்களப்பு சுதேச சவுக்கிய சங்க கந்தோர்,
1907 ம் ஆண்டு புரட்டாதிமாசம் 14 ந் உ.

தீ. தீ.,
சுதேச சவுக்கிய சங்க அக்கிராசனர்.

[Tender for Sale of Opium Licensos, Seven Korales and Chilaw District.]

இதனால் சகலருக்கும் அறிவிப்பது யாதெனில், "1899 ம் ஆண்டு துவங்கி 1905 ம் ஆண்டு வரைக்கும் இயற்றப்பட்ட அபின் கட்டளைச்சட்டங்களின்" ஏற்பாடுகளின்படி, 1908 ம் ஆண்டு தைமாதம் 1 ந் திகதி துவங்கும் வருஷத்திற்கு குருநாக்கல் டிஸ்திறிக் ஏழு கோறளைகளுக்கும் சலாப டிஸ்திறிக்கிற்கும் சில்லறையில் அபின் விற்பதற்கு ஒன்பது உத்தரவுப் பத்திரங்கள் கொடுக்கப்படும், அஃதாவது:—

ஏழு கோறளை.

| | | | |
|---|---|---|---|
| தண்டகாமம் ... | ... 1 | கட்டுப்பொத்தை | ... 1 |
| நாறம்மலை ... | ... 1 | கிரியுல்லகடை ... | ... 1 |
| வாரியப்பொலை ... | ... 1 | | |

சலாபம்.

| | | | |
|---|---|---|---|
| மாதம்பை ... | ... 1 | தங்கொட்டுவா ... | ... 1 |
| நாத்தாண்டி ... | ... 1 | வெண்ணப்புவா ... | ... 1 |

2. மேற்சொல்லிய உத்தரவுப்பத்திரங்களுடைய விற்பனவிற்காக 1907 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 16 ந் தேதிவன்று பிற்பகல் 1 மணி வரைக்கும் குருநாக்கல் கச்சேரியில் வடமேல் மாகாணம அரசாட்சி ஏசெண்டவர்களால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

3. 1907 ம் ஆண்டு ஐப்பசிமாசம் 16 ந் தேதியன்று பிற்பகல் 1 மணிக்கு குருநாக்கல் கச்சேரியில் கேள்விக்காரன் தானேயாவது, முறைமையாக எழுத்தில் அதிகாரம்பெற்ற அவனது காரியஸ்தனாவது வந்து சமுகமாயிருந்து தனது கேள்வித்தொகையில் மூன்றிலொரு பங்கு கட்ட ஆயித்தமாயிருந்தாலொழிய, யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் திருப்திகரமாயில்லாவிட்டால், வடமேல் மாகாண அரசாட்சி ஏசெண்டர் தன்னுடைய இஷ்டப்படி புதுக் கேள்விப்பத்திரங்கள் தரும்படி கேட்கலாம், அல்லது 2 மணிக்கு ஏலத்தில் விற்கலாம், அல்லது "1899 ம் ஆண்டு துவங்கி 1905 ம் ஆண்டு வரைக்கும் இயற்றப்பட்ட அபின் கட்டளைச்சட்டங்களின்" ஏற்பாடுகளின்படி அந்தக் குத்தகையை வேறுவிதமாய் முடிவாக்கலாம்.

குருநாக்கல் கச்சேரி,
1907 ம் ஆண்டு புரட்டாசிமீ 11 ந் உ.

ஏ. றீ. மிலிங்டன்,
அரசாட்சி ஏசெண்க்காக.

---

சில்லறையில் அபின் விற்க உத்தரவுப்பத்திரங்கள் கொடுத்தற்கு ஏற்படுத்திய கட்டுப்பாடுகள்.

1. சில்லறையில் அபின் விற்க உத்தரவுவாங்கினவன் ஆனவன், தக்க அதிகாரமுடையவராலே வாங்கினவன் அவன் என்று வெளிப்படுத்திய உடனே, தனது கேள்வித்தொகையில் மூன்றிலொரு பங்கை ரொக்கமாகக் கட்டிவிடுதல் வேண்டும். தக்க அதிகாரமுடையார் அந்தத் தொகையைப் பிணையாக வைத்துக்கொள்ளல் வேண்டும்; கடைசி நாலுமாதத்துத் தவணைப்பணத்துக்கல்லாமல் கேள்வித்தொகையின் தவணைப் பணமாக அதை உபயோகிக்கக்கூடாது. கேள்வித்தொகையைப் பன்னிரண்டு மாசத்துக்குஞ் சமமான தொகைப் பாகமாய்ப் பிரித்து குத்தகை யிருக்கும்வரையும் மாசந்தோறும் கடைசித் தேதி நாளில் கொடுத்துவிடல்வேண்டும். முதலாந் தவணைப் பணத்தை 1908 ம் ஆண்டு ஜனவரி (தை)மீ 31 ந் தேதியில் கொடுத்துவிடல் வேண்டும். ஒரு தவணைப்பணம் நிலுவையாம்போது நாள் ஒன்றுக்கு நூற்றுக்கு வருஷாந்த ஒன்பது வீதவட்டி கொடுத்தல் வேண்டும். உத்தரவு வாங்கினவனது வேண்டுகோளின்படி பிணைப் பணத்தொகையை அவனுக்குப் பிரியமான ஒரு வங்கியிலே நிலையாய் (பிச்செட்) போட்டுவைக்கலாம்; அதில் ஏதும் நஷ்டம் நேரிட்டால அது அவன் பாரமாகும். குறித்த தவணை தேதியிலே பணங் கொடுக்கத்தவறினால் நஷ்டம் அவனது பாரமாக, தக்க அதிகாரமுடையவர் உத்தரவை மறுபடி விற்கலாம் அல்லது செல்லாமல் நிற்கும் அத்தனை காலவளவு பாகத்தை விற்கலாம்.

2. இதனால் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்ட பண்டசாலை அல்லது இடமானது இந்த உத்தரவுப் பத்திரத்துப் பக்கத்திலே பூரணமாக விவரித்துக் காட்டியிருக்கவேண்டியது; அப்படி விவரித்துக்காட்டிய இடத்திற்கேயல்லாமல் மற்றொன்றுக்கு இந்த உத்தரவுப்பத்திரம் பொருந்துவதன்று.

3. இதனால் உத்தரவுபெற்ற இடமானது வேறு எந்தக் கட்டடங்களோடாயினும் இடங்களோடாயினும் உட்புறமாகப் போக்குவரவு செய்யத்தக்கதாக இருக்க ஒண்ணாது.

4. இதனால் உத்தரவுபெற்ற இடத்தைத் துப்புரவாகவும் சுகவளமுடையதாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

5. தக்க அதிகாரமுடையவரால் எழுத்து மூலமாக இன்ஸ்பெக்டர் பரிசோதகராக நியோகிக்கப்பட்ட எவரொருவராயினும், இன்ஸ்பெக்டர் நிலைமைக்குக் கீழ்ப்படாத பொலீஸ உத்தியோகஸ்தர் எவரொருவராயினும் கேட்கும்போது, இதனால் உத்தரவுப்பெற்ற இடத்தைப் பரிசோதனைக்காகத் திறந்து காட்டுதல் அவ்விடத்தைப் பொறுப்பாக உடையவனது கடமையாம். மேலும் அவன் தன் வசத்துள்ள அபினினது வரவுசெலவுக் கணக்கைப்பற்றிய சகல புத்தகங்களையும், காகிதபத்திரங்களையும், கணக்குத் தொகைகளையும் காட்டவும் கடமைப்பட்டவனாவன்; மேலும், அப்படிச்செய்யும்படி விசேஷமாகக் கேட்கப்பட்டால், பரிசோதனை காலத்திலே கையிருப்பில் அல்லது அவ்விடத்தில் உள்ள அபினையெல்லாம் இன்ஸ்பெக்டர் அல்லது பொலிஸ் உத்தியோகஸ்தர் முன்னிலையிலே நிறுக்கவுங் கடமைப்பட்டவனாவன்; மேலும் அவன் கையிருப்பில் உள்ள அளவிற்கும், பரிசோதனைக் காலத்திலே புத்தகக் கணக்கின்படி கையிருப்பில் இருக்கவேண்டிய அளவிற்கும் உள்ள யாதேனும் ஓர் வித்தியாசத்தைத் தன்னால் கூடிய மட்டும் விளங்கப்படுத்திக் காட்டவும் வேண்டும்.

6. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் சாப்பிடுதல் ஒண்ணாது.

7. இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் உள்ள யாதும் அபினைக் கலந்து கெடுத்தலாவது எவ்விதத்தும் பழுதுபடுத்தலாவது செய்ய ஒண்ணாது.

8. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதுங் குழப்பமான நடக்கைகளுக்கு இடங்கொடுக்க ஒண்ணாது.

9. குடியினால் வெறித்திருக்கும் அல்லது அபினால் வெறித்திருக்கும் எவனொருவனுக்காவது, தோற்றத்தளவில் பதினைந்து வயசுக்குட்பட்ட எவனொருவனுக்காவது, இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் கொடுக்க ஒண்ணாது.

10. மாலையில் எட்டு மணிக்கும் காலையில் ஆறு மணிக்கும் இடையிலுள்ள நேரங்களில், இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் ஒப்பிக்கவும் ஒண்ணாது, கொடுக்கவும் ஒண்ணாது, வாங்கிவைக்கவும் ஒண்ணாது.

11. இலக்கமிட்ட பக்கங்களுடையதாய்க் கட்டப்பெற்ற ஒரு கையிருப்புப் புத்தகம் ஆகிய ஸ்தொக் புத்தகம் ஒன்று, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்துக்காக அப்படியான புத்தகப்பிரதியொன்று தக்க அதிகாரமுடையவர் உத்தரவுப்பத்திர மெடுப்பவனுக்கு அப்போது விலையில்லாமல் சம்மா

கொடுப்பார். புதுபுத்தகம் ஒன்று வேண்டுமானால், அதை உத்தரவுபெற்றவன் தக்கஅதிகாரமுடையவரிடத்தே விலை கொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டியது. அவரிடத்தே முந்தின புத்தகத்தை ஒப்பித்துவிடல் வேண்டும்.

12. கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற உடனே அபின் பெற்ற தொகையும் செலவான தொகையுமெல்லாம் கையிருப்புப் புத்தகத்திலே கிரமமாக எழுதிவைத்திருக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாம்; புத்தகத்தின் பத்திக் கோலங்களெல்லாம் சரிவர எழுதி நிரப்பியிருக்கவேண்டும். அன்றைத்தினத்து முதலிலும் முடிவிலும் கையிருப்பிலுள்ள தொகையைத் தெளிவுபெறக் காட்டியிருக்கவேண்டும்.

13. ஒவ்வோர் மாசத்து இரண்டாந் தேதியிலாவது அதற்கு முன்னேயாவது கையிருப்புப் புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், 20 ம் கொந்திசின்படி வைத்திருக்கவேண்டிய புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரைக்கு அனுப்பிவைப்பதும் உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

14. தாம் பெற்றுக்கொண்டதும் அப்படிப்பட்ட சரியான பிரதிகளுக்காக உத்தரவுபெற்றவனுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பது பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரையது கடமையாகும். உத்தரவுபெற்றவன் தான் சரியான பிரதிகளைத் தபாலில் அனுப்பிய ஒரு கிழமையினுள்ளே அந்தப் பற்றுச்சீட்டுத் தனக்குக் கிடைக்கப்பெறவில்லையென்றால், பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரைக்கு எழுதி அந்தச் சரியான பிரதிகள் கிடைத்தனவோ என்று விசாரித்து அவை தவறிவிட்டால் இணைப்பிரதிகள் கொடுப்பது அந்த உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

15. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே தான் வேலைபார்க்க நியமிக்கப்போகிறவர் இன்னார் இன்னார் என்று காட்டி ஓர் பேர்வழி டாப்பை உத்தரவுபெற்றவன் உத்தரவுபெறுதற்கு முன்னே தக்க அதிகாரமுடையவரிடத்தே ஒப்பிப்பது அவனது கடமையாகும். ஒவ்வொரு பணிவிடைக்காரன் முழுப்பெயரும் விவரமும் அவன் பார்ப்பது இன்ன வகையான பணிவிடையென்றும் அந்த டாப்பிலே விதந்து காட்டியிருத்தல்வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாவரும் இருபத்தொரு வயசு சென்றவர்களாயிருந்தல் வேண்டும். அவர்கள் நல்ல நடக்கையுடையவர்களெனத் தக்க அதிகாரமுடையவர் திருப்திப்பட்டுக்கொள்ளவும் வேண்டும். தக்க அதிகாரமுடையவராலே இந்த உத்தரவுப்பத்திரத்தில் மாட்டறைந்த பேர்வழிகாரனல்லாத மற்றெவனொருவனும் தன் கணக்கில் அபினைப் பொறுப்பெடுக்கவாவது பெற்றுக் கொள்ளவாவது, விலைப்படுத்தவாவது, உத்தரவுபெற்றவன் பணிவிடைபார்ப்பிக்க ஒண்ணாது; அப்படியே மாட்டறைவுபெற்ற பேர்வழிகாரனல்லாத எவனொருவனையும் மேற்கண்ட கடமைகளுள் யாதொன்றையுஞ் செய்யவிட ஒண்ணாது.

16. பணிவிடைபார்க்கும் பேர்வழிகாரரது டாப்பிலே வேண்டியனவான மாற்றங்களைச் செய்தற்காக, உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே காலத்துக்குக்காலம் கேட்டுக்கொள்ளலாம்; அந்த மாற்றங்கள் இந்த உத்தரவுப்பத்திரத்திலே மாட்டறைந்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்க்கும் எவனொருவனையும் நீக்கிவிடும்படியாகத் தக்க அதிகாரமுடையவரிடத்தேயிருந்து நொத்திஸ் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற உத்தரவுபெற்றவன், அந்த அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமையினுள்ளே, இந்த உத்தரவுப்பத்திரத்திலிருந்து அப்பணிவிடைகாரனது பெயரை நீக்கிவிடும்படியாக, தக்க அதிகாரமுடையவரிடத்தே இந்த உத்தரவுப்பத்திரத்தைக் கொண்டுபோய்க் காட்டவேண்டும். அதன்பின் அப்படிப்பட்டவன் இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்ப்பதற்கு யோக்கியனாகமாட்டான்.

17. இந்த உத்தரவுப்பத்திரத்தின் இலக்கமும் உத்தரவுபெற்ற தனது பெயரும் "சில்லறையில் அபின் விற்க உத்தரவுபெற்றது" என்ற வாக்கியமும் தெளிவாய் எழுதின தொரு பலகையை, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் எல்லார்க்கும் நன்றாய்த் தெரியக்கூடிய இடத்திலே பதித்துவைக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

18. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே அபின் அல்லது சுருட்டு விற்றலேயல்லாமல் வேறொரு வியாபாரமாவது தொழிலாவது நடப்பித்தல ஒண்ணாது.

19. அவ்விடத்திற்றானே கொடுத்த காசு ரொக்கத்துக்கல்லாமல் யாதொரு அபினும் விற்க ஒண்ணாது.

20. நாலு டிறும் நிறைக்கு அதிகமான அபினை விற்றபொதெல்லாம், அதை வாங்கினவனுடைய முழுப்பெயரையும் மேல்விலாசத்தையும் விற்ற அளவையும் விற்ற தேதியையுங் காட்டி, கையிருப்புப் புத்தகத்திலே "குறிப்பு" பத்திக்கலத்திலே எழுதிவைப்பது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

21. உத்தரவுபெற்ற இடத்திலே எந்த நேரங்களிலும் உபயோகிக்கிறதற்காக ஒரு கூட்டத் தராசுபடிகளும், கால் அவுன்ஸ், அரை அவுன்ஸ், ஒரு அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ், நாலு அவுன்ஸ், எட்டு அவுன்ஸ், ஒரு றுத்தல், இரண்டு றுத்தல், நாலு றுத்தல், ஏழு றுத்தலாகிய அவாட்போர்ச் சாமானிய தராத்து நிறைகளையும் வைத்திருத்தல் வேண்டும்.

22. கணக்குப் புத்தகம் வைப்பதற்காக, உத்தரவுபெற்றவன் இதன் பின்னுற் சொல்லப்பட்ட விதிகளை அனுசரித்து நடத்தல்வேண்டும்:—

சில்லறையில் அபின் வியாபாரிகள் வைத்திருக்கவேண்டிய கையிருப்புப் புத்தகத்து மாதிரிப் பக்கம்:—

| தேதி. | | ரூ. அ. டி. | யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது. | குறிப்பு |
|---|---|---|---|---|
| ஆனி 1.—கையிருப்பு அபின் பாக்கி | ... | 17 8 4 | | |
| பெற்றுக்கொண்டது | ... | 10 8 2 | | |
| மொத்தம் | ... | 28 0 6 | ... இலக்கம் 1 மொத்தவிலையாளன் சுவான்பிள்ளை | |
| கொடுத்தது ... | ... | 1 7 9 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 26 8 13 | | |
| ஆனி 2.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | |
| மொத்தம் | ... | 26 8 13 | | |
| கொடுத்தது ... | ... | 0 15 5 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 25 9 8 | | |
| ஆனி 3.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | |
| மொத்தம் | ... | 25 9 8 | | |
| கொடுத்தது ... | ... | 2 7 1 | | |

கையிருப்பு ஸ்தொக் புத்தகம் வைத்திருப்பதற்கான விதிகள்.

புத்தகத்தினுள்ளே முதலட்டையை அடுத்து இங்கிலிஷிலுந் தமிழிலுஞ் சிங்களத்திலும் இவ்விதிகளின் ஒவ்வோர் பிரதியாக மூன்றும், மற்றை இறுதிய அட்டையை அடுத்து அப்படியே பிரதி மூன்றுமாக, ஆறு பிரதிகளை வைத்துப் பெலமாகக் கட்டிவைத்திருத்தல் வேண்டும்.

---

அவாட்போய் நிறை.

| | | |
|---|---|---|
| 16 டிறும் | = | 1 அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = | 1 றுத்தல் |
| 28 றுத்தல் | = | 1 குவாட்டர் |
| 4 குவாட்டர் | = | 1 கண்டிறற்வேற் |
| 20 கண்டிறற்வேற் | = | 1 தொன் |

குறிப்பு.—180 கிறெயின் 6·582 அவாட்போய் டிறும்களுக்குச்சரி; அதாவது 7 டிறும்களுக்குக்குறைய.

[Tender for Sale of Opium License, Jaffna.]

1899 ம் ஆண்டின் 5 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவின்படி இத்தால் காண் விளம்பரம் பண்ணுவதாவது.

1908 ம் ஆண்டு தைமாதம் 1 ந் தேதி தொடக்கம் ஒரு வருஷத்துக்கு யாழ்ப்பாண ஸ்தான சங்க எல்லைக்குட் சில்லறையாக அபின் விற்பதற்கு கொடுக்கப்படும் உத்தரவுச் சீட்டு ஒன்று.

மேற்படி உத்தரவைப்பெறக் கேட்போர் ஒட்டி முத்திரைவைத்த பத்திரங்களை யாழ்ப்பாண ஸ்தான சங்க அக்கிராசனருக்கு 1907 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 29 ந் தேதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு முன் அனுப்பவேண்டியது. குறித்த நேரத்துக்குப்பின் வரும் பத்திரங்கள் ஏற்கப்படமாட்டா. கூடிய தொகைப் பத்திரத்தை அல்லது வேறெந்தப் பத்திரத்தை ஏற்க அல்லது விட அக்கிராசனருக்குத் தத்துவமுண்டு

1899 ம் ஆண்டு 1905 ம் ஆண்டு அபின் கட்டளைச்சட்டங்களின்படியும் 1904 ம் ஆண்டு 4 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படியும் பின்வரும் நிருவாகங்களுக்கமையவும் உத்தரவுச்சீட்டுக் கொடுக்கப்படும்.

ரீ. ஏ. கேறி,
ஸ்தானசங்க அக்கிராசனருக்காக.

ஸ்தானசங்கக் கந்தோர்,
யாழ்ப்பாணம், 1907 ம் ஆண்டு புரட்டாதிமீ 16 ந் உ.

---

சில்லறையில் அபின் விற்க உத்தரவுப்பத்திரங்கள் கொடுத்தற்கு ஏற்படுத்திய கட்டுப்பாடுகள்.

1. சில்லறையில் அபின் விற்க உத்தரவுவாங்கினவன் ஆனவன், தக்க அதிகாரமுடையவராலே வாங்கினவன் அவன் என்று வெளிப்படுத்திய உடனே, தனது கேள்வித்தொகையில் மூன்றிலொரு பங்கை ரொக்கமாகக் கட்டிவிடுதல் வேண்டும். தக்க அதிகாரமுடையார் அந்தத் தொகையைப் பிணையாக வைத்துக்கொள்ளல் வேண்டும்; கடைசி நாளுமாதத்துத் தவணைப்பணத்துக்கல்லாமல் கேள்வித்தொகையின் தவணைப் பணமாக அதை உபயோகிக்கக்கூடாது. கேள்வித்தொகையைப் பன்னிரண்டு மாசத்துக்குஞ் சமமான தொகைப் பாகமாய்ப் பிரித்து குத்தகை யிருக்கும்வரையும் மாசந்தோறும் கடைசித் தேதி நாளில் கொடுத்துவிடல்வேண்டும். முதலாந் தவணைப் பணத்தை 1908 ம் ஆண்டு ஜனவரி (தை)மீ 31 ந் தேதியில் கொடுத்துவிடல் வேண்டும். ஒரு தவணைப்பணம் நிலுவையாம்போது நாள் ஒன்றுக்கு நூற்றுக்கு வருஷாந்த ஒன்பது வீதவட்டி கொடுத்தல் வேண்டும். உத்தரவு வாங்கினவனது வேண்டுகோளின்படி பிணைப் பணத்தொகையை அவனுக்குப் பிரியமான ஒரு வங்கியிலே நிலையாய் (டிச்செட்) போட்டுவைக்கலாம்; அதில் ஏதும் நஷ்டம் நேரிட்டால் அது அவன் பாரமாகும். குறித்த தவணைத் தேதியிலே பணங் கொடுக்கத்தவறினால் நஷ்டம் அவனது பாரமாக, தக்க அதிகாரமுடையவர் உத்தரவை மறுபடி விற்கலாம் அல்லது செல்லாமல் நிற்கும் அத்தனை காலஅளவு பாகத்தை விற்கலாம்.

2. இதனால் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்ட பண்டசாலை அல்லது இடமானது இந்த உத்தரவுப் பத்திரத்துப் பக்கத்திலே பூரணமாக விவரித்துக் காட்டியிருக்கவேண்டியது; அப்படி விவரித்துக்காட்டிய இடத்திற்கேயல்லாமல் மற்றொன்றுக்கு இந்த உத்தரவுப்பத்திரம் பொருந்துவதன்று.

3. இதனால் உத்தரவுபெற்ற இடமானது வேறு எந்தக் கட்டடங்களோடாயினும் இடங்களோடாயினும் உட்புறமாகப் போக்குவரவு செய்யத்தக்கதாக இருக்க ஒண்ணாது.

4. இதனால் உத்தரவுபெற்ற இடத்தைத் துப்புரவாகவும் சுகவளமுடையதாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

5. தக்க அதிகாரமுடையவரால் எழுத்து மூலமாக இன்ஸ்பெக்டர் பரிசோதகராக நியோகிக்கப்பட்ட எவரொருவராயினும், இன்ஸ்பெக்டர் நிலைமைக்குக் கீழ்ப்படாத பொலீஸ் உத்தியோகஸ்தர் எவரொருவராயினும் கேட்கும்போது, இதனால் உத்தரவுப்பெற்ற இடத்தைப் பரிசோதனைக்காகத் திறந்து காட்டுதல் அவ்விடத்தைப் பொறுப்பாக உடையவனது கடமையாம். மேலும் அவன் தன் வசத்துள்ள அபினினது வரவுசெலவுக் கணக்கைப்பற்றிய சகல புத்தகங்களையும், காகிதபத்திரங்களையும், கணக்குத் தொகைகளையும் காட்டவும் கடமைப்பட்டவனுவன்; மேலும், அப்படிச்செய்யும்படி விசேஷமாகக் கேட்கப்பட்டால், பரிசோதனை காலத்திலே கையிருப்பில் அல்லது அவ்விடத்தில் உள்ள அபினை யெல்லாம் இன்ஸ்பெக்டர் அல்லது பொலிஸ் உத்தியோகஸ்தர் முன்னிலையிலே நிறுக்கவுங் கடமைப்பட்டவனுவன்; மேலும் அவன் கையிருப்பில் உள்ள அளவிற்கும், பரிசோதனைக் காலத்திலே புத்தகக் கணக்கின்படி கையிருப்பில் இருக்கவேண்டிய அளவிற்கும் உள்ள யாதேனும் ஓர் வித்தியாசத்தைத் தன்னால் கூடிய மட்டும் விளங்கப்படுத்திக் காட்டவும் வேண்டும்.

6. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் சாப்பிடுதல் ஒண்ணாது.

7. இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் உள்ள யாதும் அபினைக் கலந்து கெடுத்தலாவது எவ்விதத்தும் பழுதுபடுத்தலாவது செய்ய ஒண்ணாது.

8. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதுங் குழப்பமான நடக்கைகளுக்கு இடங்கொடுக்க ஒண்ணாது.

9. குடியினால் வெறித்திருக்கும் அல்லது அபினால் வெறித்திருக்கும் எவனொருவனுக்காவது, தோற்றத்தளவில் பதினைந்து வயசுக்குட்பட்ட எவனொருவனுக்காவது, இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் கொடுக்க ஒண்ணாது.

10. மாலையில் எட்டு மணிக்கும் காலையில் ஆறு மணிக்கும் இடையிலுள்ள நேரங்களில், இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் ஒப்பிக்கவும் ஒண்ணாது, கொடுக்கவும் ஒண்ணாது, வாங்கிவைக்கவும் ஒண்ணாது.

11. இலக்கமிட்ட பக்கங்களுடையதாய்க் கட்டப்பெற்ற ஒரு கையிருப்புப் புத்தகம் ஆகிய ஸ்தொக் புத்தகம் ஒன்று, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்துக்காக அப்படியான புத்தகப்பிரதியொன்று தக்க அதிகாரமுடையவர் உத்தரவுப்பத்திரம் பெற்றவனுக்கு அப்போது விலையில்லாமல் சும்மா

கொடுப்பார். புதுபுத்தகம் ஒன்று வேண்டுமானால், அதை உத்தரவுபெற்றவன் தக்கஅதிகாரமுடையவரிடத்தே விலைகொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டியது. அவரிடத்தே முந்தின புத்தகத்தை ஒப்பித்துவிடல் வேண்டும்.

12. கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற உடனே அபின் பெற்ற தொகையும் செலவான தொகையுமெல்லாம் கையிருப்புப் புத்தகத்திலே கிரமமாக எழுதிவைத்திருக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாம்; புத்தகத்தின் பந்திக் கோலங்களெல்லாம் சரிவர எழுதி நிரப்பியிருக்கவேண்டும். அன்றைத்தினத்து முதலிலும் முடிவிலும் கையிருப்பிலுள்ள தொகையைத் தெளிவுபெறக் காட்டியிருக்கவேண்டும்.

13. ஒவ்வோர் மாசத்து இரண்டாந் தேதியிலாவது அதற்கு முன்னேயாவது கையிருப்புப் புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், 20 ம் கொந்திஷன்படி வைத்திருக்கவேண்டிய புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், பொலிஸ் இன்ஸ்பெட்டர் பெரியதுரைக்கு அனுப்பிவைப்பதும் உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

14. தாம் பெற்றுக்கொள்ளும் அப்படிப்பட்ட சரியான பிரதிகளுக்காக உத்தரவுபெற்றவனுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பது பொலிஸ் இன்ஸ்பெட்டர் பெரியதுரையது கடமையாகும். உத்தரவுபெற்றவன் தான் சரியான பிரதிகளைத் தபாலில் அனுப்பிய ஒரு கிழமையினுள்ளே அந்தப் பற்றுச்சீட்டுத் தனக்குக் கிடைக்கப்பெறவில்லையென்றால், பொலிஸ் இன்ஸ்பெட்டர் பெரியதுரைக்கு எழுதி அந்தச் சரியான பிரதிகள் கிடைத்தனவோ என்று விசாரித்து அவை தவறிவிட்டால் இணைப்பிரதிகள் கொடுப்பது அந்த உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

15. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே தான் வேலைபார்க்க நியமிக்கப்போகிறவர் இன்னார் இன்னார் என்று காட்டி ஓர் பேர்வழி டாப்பை உத்தரவுபெற்றவன் உத்தரவுபெறுதற்கு முன்னே தக்க அதிகாரமுடையவரிடத்தே ஒப்பிப்பது அவனது கடமையாகும். ஒவ்வொரு பணிவிடைக்காரன் முழுப்பெயரும் விவரமும் அவன் பார்த்து இன்ன வகையான பணிவிடையென்றும் அந்த டாப்பிலே விதந்து காட்டியிருத்தல்வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாவரும் இருபத்தொரு வயசு சென்றவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் நல்ல நடக்கையுடையவர்களெனத் தக்க அதிகாரமுடையவர் திருப்திப்பட்டுக்கொள்ளவும் வேண்டும். தக்க அதிகாரமுடையவரால் இந்த உத்தரவுப்பத்திரத்தில் மாட்டறைந்த பேர்வழிகாரனல்லாத மற்றெவனொருவனும் தன் கணக்கில் அபினைப் பொறுப்பெடுக்கவாவது பெற்றுக் கொள்ளவாவது, விலைப்படுத்தவாவது, உத்தரவுபெற்றவன் பணிவிடைபார்ப்பிக்க ஒண்ணாது; அப்படியே மாட்டறைவுபெற்ற பேர்வழிகாரனல்லாத எவனொருவனையும் மேற்கண்ட கடமைகளுள் யாதொன்றையுஞ் செய்யவிட ஒண்ணாது.

16. பணிவிடைபார்க்கும் பேர்வழிகாரரது டாப்பிலே வேண்டியனவான மாற்றங்களைச் செய்தற்காக, உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே காலத்துக்குக்காலம் கேட்டுக்கொள்ளலாம்; அந்த மாற்றங்கள் இந்த உத்தரவுப்பத்திரத்திலே மாட்டறைந்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்க்கும் எவனொருவனையும் நீக்கிவிடும்படியாகத் தக்க அதிகாரமுடையவரிடத்தேயிருந்து நொத்தீஸ் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற உத்தரவுபெற்றவன், அந்த அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமையினுள்ளே, இந்த உத்தரவுப்பத்திரத்திலிருந்து அப்பணிவிடைகாரனது பெயரை நீக்கிவிடும்படியாக, தக்க அதிகாரமுடையவரிடத்தே இந்த உத்தரவுப்பத்திரத்தைக் கொண்டுபோய்க் காட்டவேண்டும். அதன்பின் அப்படிப்பட்டவன் இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்ப்பதற்கு யோக்கியனாகமாட்டான்.

17. இந்த உத்தரவுப்பத்திரத்தின் இலக்கமும் உத்தரவுபெற்ற தனது பெயரும் "சில்லறையில் அபின் விற்க உத்தரவுபெற்றது" என்ற வாக்கியமும் தெளிவாய் எழுதின தொரு பலகையை, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் எல்லார்க்கும் நன்றாய்த் தெரியக்கூடிய இடத்திலே பதித்துவைக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

18. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே அபின் அல்லது சுருட்டு விற்றலேயல்லாமல் வேறொரு வியாபாரமாவது தொழிலாவது நடப்பித்தல் ஒண்ணாது.

19. அவ்விடத்திற்றானே கொடுத்த காசு ரொக்கத்துக்கல்லாமல் யாதொரு அபினும் விற்க ஒண்ணாது.

20. நாலு டிரும் நிறைக்கு அதிகமான அபினை விற்றபோதெல்லாம், அதை வாங்கினவனுடைய முழுப்பெயரையும் மேல்விலாசத்தையும் விற்ற அளவையும் விற்ற தேதியையுங் காட்டி, கையிருப்புப் புத்தகத்திலே "குறிப்பு" பந்திக்கலத்திலே எழுதிவைப்பது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

21. உத்தரவுபெற்ற இடத்திலே எந்த நேரங்களிலும் உபயோகிக்கிறதற்காக ஒரு கூட்டத் தராசுபடிகளும், கால் அவுன்ஸ், அரை அவுன்ஸ், ஒரு அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ், நாலு அவுன்ஸ், எட்டு அவுன்ஸ், ஒரு ருத்தல், இரண்டு ருத்தல், நாலு ருத்தல், ஏழு ருத்தலாகிய அவாட்போர்ச் சாமானிய தராத்து நிறைகளையும் வைத்திருத்தல் வேண்டும்.

22. கணக்குப் புத்தகம் வைப்பதற்காக, உத்தரவுபெற்றவன் இதன் பின்னுற் சொல்லப்பட்ட விதிகளை அனுசரித்து நடத்தல்வேண்டும்:—

சில்லறையில் அபின் வியாபாரிகள் வைத்திருக்கவேண்டிய கையிருப்புப் புத்தகத்து மாதிரிப் பக்கம்:—

| தேதி. | | ரூ. அ. டி. | யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது. | குறிப்பு |
|---|---|---|---|---|
| ஆனி 1.—கையிருப்பு அபின் பாக்கி | ... | 17 8 4 | | |
| பெற்றுக்கொண்டது | ... | 10 8 2 | | |
| மொத்தம் | ... | 28 0 6 | | இலக்கம் 1 மொத்தவிலையாளன் சுவான்பின்னை |
| கொடுத்தது ... | ... | 1 7 9 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 26 8 13 | | |
| ஆனி 2.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | |
| மொத்தம் | ... | 26 8 13 | | |
| கொடுத்தது ... | ... | 0 15 5 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 25 9 8 | | |
| ஆனி 3.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | |
| மொத்தம் | ... | 25 9 8 | | |
| கொடுத்தது ... | ... | 2 7 1 | | |

கையிருப்பு ஸ்தொக் புத்தகம் வைத்திருப்பதற்கான விதிகள்.

புத்தகத்தினுள்ளே முதலட்டையை அடுத்து இங்கிலீஷிலுந் தமிழிலுஞ் சிங்களத்திலும் இவ்விதிகளின் ஒவ்வோர் பிரதியாக மூன்றும், மற்றை இறுதிய அட்டையை அடுத்து அப்படியே பிரதி மூன்றுமாக, ஆறு பிரதிகளை வைத்துப் பெயமாகக் கட்டிவைத்திருத்தல் வேண்டும்.

அவாட்போய் நிறை.

| | | |
|---|---|---|
| 16 டிரும் | = | 1 அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = | 1 ருத்தல் |
| 28 ருத்தல் | = | 1 குவாட்டர் |
| 4 குவாட்டர் | = | 1 கண்டிறற்வேற் |
| 20 கண்டிறற்வேற் | = | 1 தொன் |

குறிப்பு.—180 கிறேய்ன் 6·582 அவாட்போய் டிரும்களுக்குச்சரி; அதாவது 7 டிரும்களுக்குக்குறைய.

[Tender for Arrack Rent in Northern Province.]

உத்தமதேசாதிபதியரால் நியமிக்கப்பட்ட டெண்டர்சமாஜம் ஒன்று,—பின்னுற் சொல்லப்படும் அரக்குச் சாராயக் குத்தகைகளைக் குறித்துப் பட்டணங்களில் ... வந்திருக்கும் ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களைத் திறந்து கவனித்துப் பார்க்கும் நோக்கமாக, கவுன்சில் சங்கமண்டபத்தில் ... கூடுமென்று இதினால் அறிவிக்கப்படுகிறது.

௧௯0௭ ம் ௵ அக்றோபர் (ஐப்பசி) ௴ ௯ ந் தேதி.

வடமாகாணம்.—முல்லைத்தீவு டிஸ்திறிக் பகுதி ; ௧௯0௮ ம் ஆண்டு ஜனவரி (தை)௴ ௧ ந் தேதி முதலாக ஒரு வருஷ காலத்துக்கு.

நன்ருகக் கவனித்துக்கொள்ள வேண்டிய குறிப்பு.—மேலே குறித்த குத்தகைப் பகுதியின் எல்லைகள் அரசிறைவருமான டிஸ்திறிக் பகுதியோடு சமமான எல்லைகளையுடையது அல்ல ; கருநாவற் பற்று தெற்கும் பகுதி இந்தக் குத்தகைப்பகுதிக்குச் சேர்ந்தது அல்ல.

குறித்த நாள் மத்தியானம் பன்னிரண்டரை மணிக்குப் பிறகு யாதொரு கேள்விப்பத்திரமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒவ்வொரு கேள்விக்காரனும் தான் கொடுக்க ஆயத்தமாயிருப்பது இன்ன விலை எனப் பத்திரத்திலே காட்டி எழுதவேண்டும்.

கேள்விப்பத்திரங்களைச் சரியாய்ச் சீல் முத்திரைவைத்தொட்டி கலோனியல் சக்கிடுத்தார் கனம் மெஸ் ஹியூ. கிளிவ்வோட், சி. எம். ஜி., என்று மேல்விலாசமிட்டு, "அரக்குச் சாராயக் குத்தகை ஒப்பந்தக் கேள்வி" என்று எழுதப்பட்டு, தபால் மார்க்கமாக அனுப்பிவைக்கலாம் ; அல்லது கேள்விக்காரன் தானே போட் சமாஜத்துக்கு முகமுகமாக நேரே கொடுக்கலாம்.

விற்பனவுக்கொத்தின மாதிரிக் கடுதாசிகளும் தவறணைக்கடைகளின் இடாப்பும் இலங்கையில் எந்தக் கச்சேரியிலும் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விவரம் அறியவேண்டுமானல், அரசிறை வருமான அதிகாரியார் (கொண்ட்ரோல்லர் ஒவ் றெவெனியூ) அவர்களுக்குக் காகிதம் எழுதியாவது நேரே அவரைக் கண்டு கேட்டாவது பெற்றுக்கொள்ளலாம். நியாயமான ஒப்பந்தக் கேள்வி கிடைக்காவிட்டால், குத்தகை ஏலங்கூறி விற்கப்படும்.

இங்கிலீஷ் பேச அறியாத கேள்விக்காரர்கள், போட் சமாஜத்தாரோடு சம்பாஷிக்க விரும்புகிறவர்கள், தங்கள் தங்கள் துவிபாஷகரை இட்டுக்கொண்டுவரக்கடவர்கள்.

கவுன்சில் சங்கமண்டபத்துக்குக் கேள்விக்காரன் தானேயாவது அவனது அதிகாரப்பெற்ற ஏஜன்றுத் தத்துவகாரனாவது வந்திருந்து, தான் கேட்ட வீதம் ஒரு மாசக் குத்தகைத் தொகைப்பணம் உடனகையில் கட்டுவதற்கு ஆயத்தமாயிருந்தாலொழிய, யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாது.

இரண்டு கேள்விப்பத்திரங்கள் அல்லது அதற்கு மேலானவைகள் ஒரு சமத்தொகைக் கேள்வியாயிருக்கும் பக்ஷத்தில், இரண்டிலொன்று செய்வதற்கு போட்சமாஜத்துக்கு இடமுண்டு : அதாவது, அந்தக் குறித்த கேள்விக்காரர்கள் மட்டுமே விலைவைத்துக் கேட்கிற பிரசித்த ஏலத்தில் குத்தகையை உடனகையில் போடலாம் ; அல்லது புதுக்கேள்விப்பத்திரங்களைக் கேட்கலாம்.

குத்தகை வாங்கினவர் ஒரு கலனுக்கு காலரை ரூபாவுக்குக் குறையாத எந்த விலைக்கும் அரக்குச்சாராயம் விற்றற்கு இடங்கொடுக்கப்படுவார்கள்.

கொண்ட்ரோல்லர் ஒவ் றெவெனியூ அவர்களிடம் எழுத்து மூலமாக ஆவது, நேரே கண்டு கேட்டாவது, கேள்விப்பத்திரமாதிரிக் கடுதாசிகள் சும்மா விலையில்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.

உத்தம தேசாதிபதியார் கட்டளைப்படி,

ஹியூ. கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

கொழும்பு, இராசாங்க லிகிதர் கந்தோர்,
1907 ம் ௵ புரட்டாதி (செப்றெம்பர்)௴ 27 ௳.

---

[Tenders for the Transport of Salt to Udappu.]

1907 ம் ஆண்டு ஐப்பசி௴ 12 ந் தேதி துவங்கி 1908 ம் ஆண்டு சித்திரைமாதம் 20 ந் தேதிவரைக்கும் மீறுணர்த்துங் காலங்களில் புத்தளம் உப்புக் குதங்களிலிருந்து உப்பு ஏற்றுமதிபண்ணிக் கொண்டுபோய் உடப்பு குதத்துக்கு நிறைத்து நிறைத்துக் கொடுக்கிறதற்கென்று மேல் உரையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசென்றுத்துரையவர்களால் 1907 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3 ந் தேதி, பகல் 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விக்காரன் இதன் பின்னுல் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டும் :—

(a) கேள்விக்காரன் 1907 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 3 ந் தேதிக்கு முன்னே புத்தளம் கச்சேரியில ரூபாய் 5 (ஐந்து) கட்டவேண்டும். நியமிக்கும் ஞாயமான நாளைக்குள் பொருத்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினல் இந்தக் கட்டின பணம் கொவர்ண்மேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும்.

(b) கேள்விப்பத்திரத்தின் ஓ ஊப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சுங்கைபோந்த வருமானவிசாரணைத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசென்றுத்துரையவர்களுக்கும் அனுப்பும் சமையம் கேள்விக்காரன் தவ்வால் வழியாக அனுப்பவேண்டும்.

(c) கொந்திறஸ் அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்விக்காரர் தங்களுடைய பெயரையும் தாங்களிருக்கு மிடத்தையும் புத்தளத்தில் மேலவிலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

(d) புத்தளத்திலிருந்து 250 அந்தர் உப்பு ஏற்றி உடப்புக்குப்போகும் ஒவ்வொரு போட்டுக்கும் என்ன கூலியென்று கேள்விக்காரர் காட்டியிருக்கவேண்டியது.

இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளம்பரங்களை உப்புத்துரையவர்களிடம் விருவி அறிந்துகொள்ளலாம்.

ஏ. சி. ஒல்னட்,
உதவி ஏசென்றுத்துரை.

புத்தளம் கச்சேரி,
1907 ம் ௵ புரட்டாசி௴ 18 ந் தேதி.

## UNOFFICIAL ANNOUNCEMENTS.

### தொழிலுக்கு உடபாதர்களின அறிவித்தல்.

[M. D. P. Gunaratna.]

கொழும்பு 2ம் டிவிசன் மருதானை நெம்பர் 118 வீட்டில் இருக்கும் எம். டீ. பீற்றர் குணரத்ன ஆகிய நான் 1907ம் ஆண்டு முதலாம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 1 B என்னும் செக்ஷனது 8 ம் செக்சன்படி கண்டி டிஸ்திறிக்டில சிங்களப் பாஷையில பிரசித்த நொத்தாரிசாக வேலைபார்ப்பதற்கு மூன்று மாசத்தின்பின் பதிவுகந்தோர் தலைவர் அவர்களிடம் உத்தரவு கேட்பேனென்று இத்தால அறிவித்தல் கொடுக்கிறேன்.

எம். டீ. பீ. குணரத்ன.

கொழும்பு,
1907 ம் ஆண்டு புரட்டாசிமீ 7 ந் உ.

---

[V. M. Anthoni Pillai.]

இப்போது கொழும்பைச்சேர்ந்த கொம்பெனித்தெரு வோக்சோல் வீதியில் 42 G நொம்பர் கிரகத்தில் வசிக்கும் வின்சென்ற் முத்தையா அந்தோனிப்பிள்ளை ஆகிய நான் வடமேன்மாகாணம் புத்தளம் டிஸ்திறிக்கைச்சேர்ந்த புத்தளத்தில் அங்கிலேய பாஷையில் ஓர் பிரசித்த நொத்தாரிசாகத் தொழில்நடத்திவர என்னை நியமிக்கும்படி இற்றைக்கு மூன்று மாசத்தின்பின் றெஜிஸ்திறார் ஜெனறல் அவர்களை வேண்ட எண்ணியிருக்கிறேனென்பதை 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவின் 1 B செக்ஷன்பிரகாரம இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

(ஒப்பம்) வி. மு. அந்தோனிப்பிள்ளை.

1907 ம ஆண்டு புரட்டாசிமாதம 16 ந் தேதி.
கொழும்பு, வொக்சொல்தெரு, 42 G கிரகம்.

---

[H. L. Martell.]

அருத்கூறு கோறளையைச்சேர்ந்த தானகஹ பத்துவிலுள்ள தானகஹ கிராமத்திலும் தற்சமயம் வசிப்பவருமாகிய ஹேலபங்க லவ்னேரிஸ மார்டல் ஆகிய நான் 1907 ம் ஆண்டு முதலாம் இலக்கச் சட்டத்தின் 1B என்னும் செக்ஷன் 2 ம் விதிப்படி காலி பிரிவில சிங்களப் பாஷையில பிரசித்த நொத்தாரிசாக வேலைபார்ப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படவும் பதிவுசெய்யப்படவும் இன்று முதல மூன்று மாசத்தின்பின் பதிவுகந்தோர் தலைவர்களிடம் உத்தரவுகேட்பேனென்று இத்தால் அறிவித்தலகொடுக்கிறேன்.

எச். எல். மார்டல்.

தானகஹ,
1907 ம் ஆண்டு செப்டம்பர்மீ 23 ந் தேதி.

---

[S. D. David.]

அருத்கூறு கோறளையைச்சேர்ந்த தாகியபத்துவிலுள்ள அமந்தொலுவ கிராமத்திலும் தற்சமயம் சல்பிட்டிக் கோறளையைச்சேர்ந்த பல்லேபத்துவில் பன்னிபிட்டியில் வசிப்பவருமாகிய செம்புகுட்டி ஆரச்சிகே டொன் டேவிட் ஆகிய நான் 1907 ம் ஆண்டு முதலாம் இலக்க சட்டத்தின் 1 B என்னும் செக்ஷன் இரண்டாம் விதிப்படி நீர்கொழும்பு பிரிவில் சிங்கள பாஷையில் பிரசித்த நொத்தாரிசாக வேலை பார்ப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படவும் பதிவுசெய்யப்படவும் இன்று முதல் மூன்று மாசத்தின்பின் பதிவுகந்தோர் தலைவர்களிடம் உத்தரவு கேட்பேனென்று இத்தால் அறிவித்தல்கொடுக்கிறேன்.

எஸ். டீ. டேவிட்.

பன்னிபிட்டிய,
1907 ம் ஆண்டு செப்டம்பர்மீ 23 ந் தேதி.

---

[D. P. Jayasuriya.]

அருத்கூறு கோறளையைச்சேர்ந்த ருகம்பற்றுவிலுள்ள கந்தான கிராமத்தில் வசிக்கும் தொன் பேவிஸ் ஜயசூரிய ஆகிய நான் 1907 ம் ஆண்டு முதலாம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 1 B என்னும் செக்ஷனல் இரண்டாம் விதிப்படி சலாவத்தை பிரிவில் சிங்களப்பாஷையில் பிரசித்த நொத்தாரிசுவாக வேலைபார்ப்பதற்கு என்றும் கொள்ளப்படவும் பதிவுசெய்யப்படவும் இன்று முதல மூன்று மாசத்தின்பின் பதிவுகந்தோர் தலைவரவாகளிடம் உத்தரவுகேட்பேனென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கந்தான,
1907 ம் ஆண்டு செப்டம்பர்மீ 2 ந் உ.

டீ. பீ. ஜயசூரிய.

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.